செ.வெ.எண்-02 நாள்-03.04.2018

# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் அமைத்துள்ள நீச்சல் குளத்தில் நீச்சல் கற்றுக் கொள்ளும் திட்டத்தின் கீழ் நீச்சல் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட உள்ளது. பிரதி திங்கள் கிழமை தவிர அனைத்து நாட்களும் நடத்தப்பட உள்ளது.

முதல் கட்ட பயிற்சி வகுப்புகள் 01.04.2018 முதல் 14.04.2018 வரையிலும், இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்புகள் 15.04.2018 முதல் 28.04.2018 வரையிலும், மூன்றாம் கட்ட பயிற்சி வகுப்புகள் 29.04.2018 முதல் 12.05.2018 வரையிலும், நான்காம் கட்ட பயிற்சி வகுப்புகள் 13.05.2018 முதல் 26.05.2018 வரையிலும், ஐந்தாம் கட்ட பயிற்சி வகுப்புகள் 27.05.2018 முதல் 09.06.2018 வரையிலும், ஆறாம் கட்ட பயிற்சி வகுப்புகள் 10.06.2018 முதல் 23.06.2018 வரையிலும் காலை 8.00 மணி முதல் 9.00 மணி வரையிலும், 9.00 மணி முதல் 10.00 மணி வரை மற்றும் மாலை 3.00 மணி முதல் 4 மணி வரை, 4.00 மணி முதல் 5.00 மணி வரை ஆகிய நேரங்களிலும் காலை, மாலை இருவேளையும் 12 நீச்சல் பயிற்சி வகுப்புகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

12 வகுப்புகளில் அடிப்படை நீச்சல் பயிற்சி முழுமையாக கற்றுத்தரப்படும். எனவே கோடை விடுமுறையில் மாணவ, மாணவிகள் அனைவரும் அடிப்படை நீச்சல் பயிற்சி கற்று பயன்பெறவும், நீச்சல் பயிற்சி முழுமையாக கற்றுக்கொள்ளும் மாணவ,மாணவியர்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் சான்றிதழ் வழங்கப்படும். உடல் திறனை மேம்படுத்தி சிறந்த நீச்சல் வீரர் / வீராங்கனைகளாக உருவாகவும், தேசிய,சர்வதேச நீச்சல் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறவும், அரியலூர் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு, அரியலூர் மாவட்ட விளையாட்டு அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது ஹாக்கி பயிற்றுநனர் அவர்களை தொலைபேசி எண்.9443561313-ல் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**